**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006**

**மேல்நிலை பொதுத் தேர்வுகள், மார்ச் 2026**

**மறுகூட்டல் / மறுமதிப்பீடு முடிவுகள் வெளியிடுதல்**

**செய்திக்குறிப்பு**

நடைபெற்ற மார்ச் 2026, மேல்நிலை பொதுத்தேர்வுகளுக்கான விடைத்தாள் நகல் பெற்ற தேர்வர்கள் மறுமதிப்பீடு / மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க 05.06.2026 பிற்பகல் முதல் 17.06.2026 வரை வாய்ப்பு வழங்கப்பட்டது.

மேல்நிலை இரண்டாமாண்டு விடைத்தாள் மறுமதிப்பீடு / மறுகூட்டல் கோரி பாடவாரியாக பெறப்பட்ட மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை - 6016 (மறுமதிப்பீடு - 5814 / மறுகூட்டல் – 202) மற்றும் மேல்நிலை முதலாமாண்டு (Arrear) விடைத்தாள் மறுமதிப்பீடு / மறுகூட்டல் கோரி பாடவாரியாக பெறப்பட்ட மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை – 62 (மறுமதிப்பீடு - 61 / மறுக்கூட்டல் – 01) ஆகும்.

இதனைத் தொடர்ந்து மறுமதிப்பீடு / மறுகூட்டல் பணி தொடர்பாக இரண்டு முகாம்கள் அமைக்கப்பட்டு அனுபவம் வாய்ந்த பாட ஆசிரியர் குழுவினரைக் கொண்டு விடைத்தாள்கள் மறுமதிப்பீடு / மறுகூட்டல் செய்யப்பட்டது. இப்பணி 19.06.2026 தொடங்கி 23.06.2026 அன்று முடிக்கப்பட்டது.

தற்போது, மறுகூட்டல் (Re-total) மற்றும் மறுமதிப்பீடு (Revaluation) கோரி விண்ணப்பித்தவர்களுள், மதிப்பெண் மாற்றம் உள்ள தேர்வர்களது பதிவெண்களின் பட்டியல் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் ( Notification பகுதியில் ) 25.06.2026 (வியாழக்கிழமை) அன்று பிற்பகல் வெளியிடப்படவுள்ளது. **இப்பட்டியலில் இடம் பெறாத பதிவெண்களுக்கான விடைத்தாட்களில் எவ்வித மதிப்பெண் மாற்றமும் இல்லை** எனத் தெரிவிக்கப்படுகிறது.

மறுகூட்டல் / மறுமதிப்பீட்டில் மதிப்பெண் மாற்றம் உள்ள தேர்வர்கள் மட்டும், மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதி ஆகிய விவரங்களை பதிவு செய்து தங்களுக்கான திருத்தப்பட்ட மதிப்பெண்கள் அடங்கிய

மதிப்பெண் பட்டியலை (Statement of Marks) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேல்நிலை பொதுத்தேர்வெழுதிய தேர்வர்களுக்கு அசல் மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படும் தேதி குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்காண் பொருள் தொடர்பான சந்தேகங்களுக்கு 9498383075 / 9498383076 என்ற கைப்பேசி எண்களை தொடர்பு கொள்ளலாம்.

ஒம்/-

இயக்குநர்

**தேதி**: 24.06.2026

**இடம்: சென்னை** – 600 006.